**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 107/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | ஏசுதாசன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of March 2021.

நான் சிலையத்தில் வசித்து வருகிறேன். சம்மோசா வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் 3 வது எதிரியையும் தெரியும் என்னுடைய ஊரை சார்ந்தவர்கள். 14.10.2016 ம் தேதி மாலை 4.00 மணியளவில் நான் வியாபாரத்திற்காக சென்றுவிட்டேன். மாலை 6.10 மணியளவில் என்னுடைய மகள் எனக்கு போன் செய்து என்னையும் அம்மாவையும் எதிரிகள் அடித்துவிட்டதாக தகவல் தெரிவித்தார். நான் அருகில் உள்ள கிராமத்தில் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன் உடனே வந்துவிட்டேன். நான் வந்து பார்த்த போது என்னுடை மனைவி நைட்டி கிழிந்து இருந்தது. நான் சம்பவம் குறித்து கேட்ட போது 6.00 மணியளவில் சம்பவம் நடந்தாக கூறினார். எதிரிகள் என்னுடைய மகளை அடித்ததாகவும், அதை தட்டி கேட்டதற்காக என்னுடைய மனைவியையும் அடித்ததாக என்னிடம் கூறினார். 13.10.2016 ம் தேதி என்னுடைய மகள் படிக்கும் பள்ளியில் உள்ள ஜெனிபர் என்ற பெண் எங்கள் குடும்பத்தாரை ஊரை விட்டு ஒதுக்கி வைக்க உள்ளதாக என் மகளிடம் கூறினார். சம்பவத்தின் போது என்னுடைய மகள் வீட்டு முன்பாக தான் நின்று கொண்டிருந்ததாக கூறினார். என்னுடைய மனைவிக்கு காலில் காயம் இருந்தது. நான் என்னுடைய மனைவியை அழைத்து கொண்டு காவல்நிலையம் சென்றேன். புகார் கொடுத்த பிறகு அவர்கள் ரசீது கொடுத்தார்கள் அதை வைத்து கொண்டு நான்குநேரி அரசு மருத்துவமனையில் என்னுடைய மனைவி சிகிச்சை பெற்றார். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடக்கும் போது நீங்கள் எந்த ஊரில் இருந்தீர்கள் என்றால் அரமனேரி என்ற

கிராமத்தில் இருந்தேன். சம்பவத்தை கேள்விபட்டு எவ்வளவு நேரத்தில் வீட்டிற்கு வந்தீர்கள் என்றால் 10 நிமிடத்தில் வந்துவிட்டேன். புகார் மனுவை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். அதில் கையெழுத்து யார் போட்டிற்கள் என்றால் நானும் எனது மனைவியும் போட்டோம். காவல்நிலையத்திற்கு உங்களை மகளை அழைத்து சென்றீர்களா என்றால் பெரிய அளவில் காயம் இல்லாததால் அழைத்து செல்லவில்லை. பொது இடத்தை ஆக்கிரமித்ததால் ஊரில் உள்ள நபர்களுக்கும் உங்களுக்கும் முன்விரோதம் என்றால் சரியல்ல. பொது இடத்தை ஆக்கிரமித்ததை எதிரிகள் தட்டி கேட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த ஊருக்கு வருவதற்கு முன் மும்பையில் இருந்தீற்கள் என்றால் சரிதான். மும்பையில் உங்கள் மீது இரண்டு கொலை வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் காவல்நிலையத்திற்கு எவ்வளவு நேரத்தில் சென்றீர்கள் என்றால் சுமார் 6.30 மணிக்கு சென்றோம். மருத்துவமனைக்கு அ.சா.1 ஐ யார் அழைத்து சென்றது என்றால் நான்தான்அழைத்து சென்றேன். எதிரிகளுக்கும் உங்களுக்கும் தண்ணீர் பிடிப்பதில் முன்விரோம் என்றால் சரியல்ல. காவல்நிலையம் செல்லும் போது அ.சா.1 வேறு உடையில் சென்றார்களா என்றால் அதே உடையில் தான் வந்தார். சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலையம் எவ்வளவு தூரம் என்றால் 6 கி.மீ இருக்கும். புகார் கொடுக்கும் போது காவல்நிலையத்தில் யார் இருந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் இருந்தார். வீட்டிற்கு எவ்வளவு நேரத்தில் வந்தீற்கள் என்றால் 9.30, 10.00 மணியளவில் வந்தோம். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை அ.சா.1 உங்கள் மனைவி என்பதாலும் நீங்கள் பொது இடத்தை ஆக்கிரமித்ததை அவர்கள் தட்டி கேட்டதால் அவர்கள் மீது இந்த வழக்கை பொய்யாக கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 107/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | விமல்ராணி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of March 2021.

நான் சிலையத்தில் வசித்து வருகிறேன். கல்லூரியில் படித்து கொண்டிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் 3 வது எதிரியையும் தெரியும் என்னுடைய ஊரை சார்ந்தவர்கள். அ.சா.1 என்னுடைய அம்மா. 14.10.2016 ம் தேதி மாலை 6.00 மணியளவில் நானும் எனது அம்மாவும் வீட்டில் இருந்தோம். ஆஜர் எதிரிகளும் ஜெகன் என்பவரும் வந்து என்னை அடிக்க வந்தார்கள் சம்பவ நேரத்தில் நான் என்னுடைய வீட்டு முற்றத்தில் இருந்தேன். என்னுடைய அம்மா வீட்டின் உள்ளே இருந்தார். எதிரிகள் என்னை கையால் தாக்கினார்கள். முதுகு, தலை மற்றும் கன்னத்தில் அடித்தார்கள். எதிரிகள் அடித்தவுடன் நான் என்னுடைய அம்மாவை அழைத்தேன். எனது அம்மா வந்து தட்டிகேட்டவுடன் எதிரிகள் மூவரும் சேர்ந்து என்னுடைய அம்மாவை கையால் இரண்டு கால்களிலும் தாக்கினார்கள் என்னுடைய அம்மாவின் நைட்டியை பிடித்து கிழித்தார்கள் பதற்றத்தில் யார் கிழித்தார் என பார்க்கவில்லை. எதற்காக அடித்தார்கள் என தெரியவில்லை. ஊரில் உள்ள அனைவரும் பார்த்தார்கள் ஆனால் யாரும் விலக்கிவிடவில்லை. சம்பவத்திற்கு பிறகு எனது அப்பாவிற்கு போன் செய்தோம் அவர் வந்த பிறகு காவல்நிலையத்திற்கு எனது அம்மாவும் அப்பாவும் சென்று புகார் அளித்தார்கள். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடக்கும் போது உங்களுடன் யார் இருந்தார்கள் என்றால் எனது அம்மாவும், தம்பி, தங்கை மற்றும் ஊர்காரர்கள் இருந்தார்கள். ஊர்காரர்கள் எவ்வளவு பேர் இருந்தார்கள்

என்றால் சுமார் 10, 15 பேர் இருந்தார்கள். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் செந்தில், தாசன், லாசர் மேலும் பல பேர் இருந்தார்கள் பெயர் ஞாபகமில்லை. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்து என்றால் 20 நிமிடங்கள் நடந்தது. சம்பவ இடத்திற்கு வடபக்கம் யார் வீடு உள்ளது என்றால் யார் வீடும் இல்லை. தென்பக்கம் ராஜா என்பவர் வீடு உள்ளது. சம்பவத்திற்கு கீழ்பக்கம் யார் வீடும் இல்லை. உங்கள் வீட்டில் இருந்து தண்ணீர் தொட்டி எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 70 மீட்டர் தூரம் இருக்கும். காவல்நிலையத்திற்கு உங்கள் அம்மா, அப்பா எதில் சென்றார்கள் என்றால் பைக்கில் சென்றார்கள். புகார் மனுவை யார் கொடுத்தார்கள் என்றால் தெரியாது நான் வீட்டில் இருந்தேன். உங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்து கொண்டிற்களா என்றால் இல்லை என் அம்மாவிற்கு தான் காயம் அதிகம். உங்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சிறுகாயங்கள் தான் ஏற்பட்டது. உங்களை எதற்கு அடித்தார்கள் என்றால் தெரியாது. பொதுநல்லியில் தண்ணீர் பிடிப்பதில் எதிரிகளுடன் முன்விரோதம் என்றால் சரியல்ல. பொது இடத்தே ஆக்கிரமிப்பு செய்ததால் எதிரிகளுடன் முன்விரோதம் என்றால் சண்டை எதுவும் இல்லை எதிரிகள் நாங்கள் விறகு போட்டு வைத்திருந்ததை கேட்டார்கள். காவல்துறையினா் விசாரணைக்கு எப்போது வந்தார்கள் என்றால் சம்பவத்தன்று இரவு 8.00 மணிக்கு வந்தார்கள். அ.சா.1 உங்கள் அம்மா என்பதால் அவர்களுக்காக பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை நீங்கள் பொது இடத்தை ஆக்கிரமித்ததை அவர்கள் தட்டி கேட்டதால் அவர்கள் மீது இந்த வழக்கை பொய்யா கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 107/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | மரிய செல்வம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of March 2021.

நான் சிலையத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் 3 வது எதிரியையும் தெரியும். 14.10.2016 - ம் தேதி மாலை 6.00 மணியளவில் என்னுடைய மகள் பள்ளிக்கு சென்றுவிட்டு வீட்டு முற்றத்தில் நின்று கொண்டிருக்கும் போது நான் வீட்டில் இருந்தேன் சத்தம் கேட்டது நான் வெளியே வந்து பார்த்த போது ஜெகன், ஜெகநாதன் மற்றும் இசக்கிமுத்து என்னுடைய பிள்ளையை கையால் அடித்து கொண்டிருந்தார்கள். நான் தட்டி கேட்ட போது அவர்கள் அனைவரும் சேர்ந்து என்னையும் அடித்து முள்ளில் தள்ளினார்கள் ஜெகநாதன் நான் அணிந்திருந்த நைட்டியை கிழித்து என்னை மானபங்கபடுத்த வேண்டும் என சொல்லி என் உடல் முழுவதும் காயம் ஏற்படுத்தினார். அடித்துவிட்டு எதிரிகள் சென்றுவிட்டார்கள் என்னுடைய கணவர் வியாபாரத்திற்கு சென்றிந்தார். நான் அவர்க்கு போன் மூலம் தகவல் சொன்னேன். மாலை 6.30 மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னுடைய பிறந்த ஊர் சிலையம் என்னுடைய கணவருக்கு வேறு ஊர் என்னுடைய வீட்டிற்கு எதிர்புறம் உள்ள அரசு இடத்தில் நான் விறகு வைத்திருந்ததால் மேற்படி சம்பவம் நடந்தது. காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியிடப்படுகிறது. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த சம்பவம் நடக்கும் போது யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் 15, 20 பேர்

இருந்தார்கள். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தாசன், தாசன் மகன் செந்தில் மற்றவர்கள் யாரெல்லாம் இருந்தார்கள் என ஞாபகமில்லை. எதிரிகளின் வீட்டிற்கும் உங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 150 மீட்டர் இருக்கும். எதிரிகள் எதில் வந்தார்கள் என்றால் நடந்து தான் வந்தார்கள். சம்பவத்தின் போது உங்கள் மகளை அடிக்கும் போது நீங்கள் இல்லை என்றால் நான் வீட்டின் உள்ளே இருந்தேன். சம்பவத்தின் போது கிழிந்த நைட்டி என்ன நிறம் என்றால் சிவப்பு நிறம். கிழிந்த நைட்டியை போலிசாரிடம் ஒப்படைத்திற்களா என்றால் ஒப்படைக்கவில்லை. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் கால்மணிநேரம் நடந்தது. சம்பவம் நடக்கும் போது உங்கள் கணவர் எந்த ஊரில் இருந்தார் என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு வடபுறயம் யார் வீடு உள்ளது என்றால் யார் வீடும் இல்லை, உங்கள் வீட்டிற்கு தென்பக்கம் ராஜா வீடு உள்ளது. மேல் பக்கம் ரோடு உள்ளது. கீழ்பக்கம் 3 - வது எதிரி ஜெகன் வீடு உள்ளது. தண்ணீர் டேங்க் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 30 மீட்டர் தூரம் இருக்கும். இந்த தண்ணீர் டேங்கில் தான் ஊர் மக்கள் தண்ணீர் பிடிப்பார்கள் என்றால் சரிதான் நானும் அதில் தான் பிடிப்பேன். சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலையம் எவ்வளவு தூரம் என்றால் 7 கி.மீ தூரம் இருக்கும். காவல்நிலையத்திற்கு யார் எல்லாம் சென்றீர்கள் என்றால் நானும் எனது கணவரும் சென்றோம். புகார் மனு எழுதியது யார் என்றால் எனது மகன் எழுதினார். புகார் மனுவில் உள்ள தேதி சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 வது எதிரி ஜெகன் பெயர் பின்னால் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசிங்கமாக பேசினார் என்பது பின்னால் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் உள்ள எனது மனைவி என்ற வார்த்தை அடிக்கப்பட்டு நான் என்ற வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் உண்மை இல்லை என்பதால் தான் புகார் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உங்கள் மகளுக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்திற்களா என்றால் இல்லை. இது போன்ற சம்பவமே நடைபெறாததால் தான் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவை காவல்நிலையத்தில் யாரிடம் கொடுத்திற்கள் என்றால் உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். மருத்துமவனையில் எத்தனை நாள்கள் இருந்தீற்கள் என்றால் அன்றே வந்துவிட்டேன். மருத்துவரிடம் எதிரிகள் கையால் அடித்ததாக கூறினீற்கள் என்றால் சரிதான். தண்ணீர் டேங்கில் தண்ணீர் பிடிப்பதில் எதிரிகளுடன் முன்விரோதம் என்றால் சரியல்ல. நீங்கள் பொது இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் எதிரிகள் உங்களை தட்டி கேட்டார்கள் என்றால் சரிதான். முன்விரோதத்தின் காரணமாக எதிரிகள் உங்கள் ஆடையை கிழித்ததாக அவர்கள் மீது இந்த வழக்கை பொய்யாக கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

1. எதிரிகள் அடித்ததில் உங்களுக்கு எங்கே காயம் ஏற்பட்டது என்றால் எதிரிகள் அடித்து முள்ளுக்குள் தள்ளிவிட்டதால் வலதுகால் தொடையில் மட்டும் காயம் ஏற்பட்டது.

**மறு விசாரணை இல்லை**